**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தருமபுரி**

**முன்னிலை :- R.முகமது ரிஸ்வானுல்லா ஷெரீப் B.Sc., B.L.,**

தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், தருமபுரி.

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 4 ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 21ம் நாள்

CNR.No.TNDP 04- 002400-2025

**ஆண்டு பட்டிகை எண்.506/2025**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

தொப்பூர் காவல் நிலையம்

குற்ற எண்.166/2025 ...... குற்றமுறையீட்டாளர்

/எதிராக/

ஆறுமுகம் (வயது 40)

த/பெ.மணி ..... குற்றம் சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தொப்பூர் காவல் நிலையம் குற்ற எண். 166/2025 |
| 2. | எதிரியின் பெயர் | ஆறுமுகம் |
| 3. | தந்தையின் பெயர் | மணி |
| 4. | தொழில் | ஓட்டுநர் |
| 5. | குடியிருப்பு | க.எண்.3/205B, கொல்லபுரியம்மன் கோவில் கொட்டாய் கிராமம், சுண்டேகுப்பம் அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம். |
| 6. | வயது | 40/2025 |
| 7. | சம்பவம் | தேதி : 20.06.2025 |

| | | |
|---|---|---|
| 8. | முறையீடு | தேதி : 20.06.2025 |
| 9. | கைது | தேதி : 20.06.2025 |
| 10. | பிணையில் விடுதல் | தேதி : 20.06.2025 |
| 11. | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல் | இல்லை |
| 12. | விசாரணை துவக்கம் | தேதி : 20.09.2025 |
| 13. | விசாரணை முடிவு | தேதி : 12.05.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு | **முடிவாக**, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழான குற்றங்களை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை சட்டப்பிரிவு 278(1) BNSS -ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் சான்றுபொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |
| 15. | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு/முடிவு | நாள் : 04.06.2026 |
| 16. | காலதாமதத்தின் விளக்கம் | காலதாமதம் இல்லை |

கடந்த 20.09.2025 ம் தேதியன்று நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரி C.C.No. 506/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற D.No.1684/2025 நாள் 24.07.2025 ஆம் தேதிய உத்தரவுப்படி நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரியிலிருந்து கடந்த 09.12..2025 ம் தேதியன்று வழக்கு கோப்பு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 11.12..2025 ம்

தேதியன்று C.C.No.506/2025 ஆக தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் **திருமதி.R.தீபா** B.Sc., L.L.M., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.சிவா, B.A.,B.L., D.C.S.,** அவர்கள் ஆஜராகியும் கடந்த 02.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இருதரப்பு வாதங்களும் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

தொப்பூர் காவல் நிலைய குற்ற எண்.166/2025-ல் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு -

1. இவ்வழக்கில் இறந்துபோன மணி என்பவர் TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட 6 வீல் TATA லாரியின் கிளினராகவும், மேற்படி லாரியின் ஓட்டுனராக எதிரி ஆறுமுகம் என்பவரும் வேலை செய்து வந்துள்ளார்கள். கடந்த 20.06.2025 ம் தேதி அதிகாலை 02.20 மணிக்கு தொப்பூர் காவல் நிலைய சரகம் வெள்ளக்கல் - ஜருகு சாலையில் உள்ள FMSSY 2.200 கி.மீ என்ற மைக்கல் அருகில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகில் உள்ள வளைவில் எதிரி ஆறுமுகம் என்பவர் TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட TATA லாரியை ஓட்டிக்கொண்டும் மணி என்பவர் இடது டோர் ஓரமாக உட்கார்ந்து கிளினர் வேலை பார்த்துக்கொண்டு வந்தபோது எதிரி மேற்படி லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து லாரியை திடீரென ரோட்டின் வலது புறம் வளைத்ததில் மணி உட்கார்ந்து வந்த பக்கம் இருந்த லாரியின் இடது பக்க டோர் திறந்ததால் மணி என்பவர் லாரியிலிருந்து வெளியே மல்லாக்காக விழுந்துள்ளார். சம்பவத்தில் மணி என்பவருக்கு பின் தலையில் பலத்த இரத்தகாயமும், மூக்கிலும், காதிலும் இரத்தம் வந்து பேசமுடியாத நிலையில் தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்து கடந்த 20.06.2025 ம் தேதி காலை 09.55 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். எனவே, எதிரி ஆறுமுகம் என்பவர் மீது சட்டப் பிரிவுகள் 281, 106(1)

BNS -ன் கீழ் தொப்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருந்ததால் இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரி நீதிமன்றத்தால் சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு சட்டப்பிரிவு 230 BNSS-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3(i). குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பு வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழான குற்றங்களின் சாராம்சத்தை விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றங்களை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3(ii). இந்நிலையில், நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரியிலிருந்து கடந்த 09.12.2025 ம் தேதியன்று வழக்கு கோப்பு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 11.12.2025-ம் தேதியன்று C.C.No.506/2025 ஆக தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.11** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகளில் உள்ள 10, 11, 12, 13, 14 மற்றும் 15 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்குறவு செயப்பட்டுள்ளார்கள்.

5. **<u>அரசு தரப்பு சாட்சிய சான்றவணங்களின்படி தெரியவரும் வழக்கு விவரம்</u> :-**

5(i). இவ்வழக்கின் புகார்தாரரான சித்ரா அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 சித்ரா இறப்புற்ற மணியின் மனைவி ஆவார். அ.சா.1-ன் கணவரான இறப்புற்ற மணி என்பவர் கடந்த 18.06.2025 ம் தேதி காலை சக்திவேல் என்பவருக்கு சொந்தமான TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட TATA லாரியில் கிளினராக வேலைக்கு சென்றுள்ளார். கிருஷ்ணகிரியில் இருந்து வேலிக்கல் லோடு ஏற்றிக்கொண்டு சிறுமுகை என்று ஊரில் இறக்கிவிட்டு மீண்டும் கிருஷ்ணகிரி வர வேண்டி மேற்படி வாகனத்தை ஆறுமுகம் ஓட்டிக்கொண்டும், இஞ்ஜின் பானட் மீது சிவக்குமார் என்பவர் உட்கார்ந்து கொண்டும், செல்வம் என்பவர் பின் சீட்டில் படுத்துக்கொண்டும், இறப்புற்ற மணி இடது டோர் ஓரமாக உட்கார்ந்துகொண்டு கடந்த 20.06.2025 ம் தேதி அதிகாலை சுமார் 02.20 மணியளவில் தருமபுரி மாவட்டம், வெள்ளக்கல் - ஜருகு சாலையில் உள்ள FMSSY 2-200 கி.மீ என்ற மைல்கல் அருகில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் வளைவில் வந்தபோது ஆறுமுகம் லாரியை வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று வலதுபுறம் வளைத்தபோது இடது பக்க டோர் திறந்ததில் லாரியில் உட்கார்ந்து வந்த மணி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தினால் மணிக்கு பின் தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து லாரியின் பயணம் செய்த செல்வம் என்பவர் இறப்புற்ற மணியின் மனைவியான அ.சா.1 சித்ராவிற்கு போன் மூலம் தகவல் சொல்லியுள்ளார்.

5(ii). அ.சா.1 சித்ரா சம்பவத்தை கேள்விபட்டு தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அவரது கணவரான மணியை பார்த்துள்ளார். சிகிச்சையில் இருந்த மணி காலை 09.55 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்.

பின்பு சம்பவம் குறித்து அ.சா.1 தொப்பூர் காவல் நிலையம் ஆஜராகி நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.10 திரு.கவரன் என்பவரிடம் விபத்து ஏற்படுத்திய எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி கடந்த 20.06.2025 ம் தேதி **அ.சா.ஆ.1** புகார்மனு கொடுத்துள்ளார்.

5(iii). அ.சா.10 திரு.கவரன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்படி புகார்மனுவை பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண்.166/2025 சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழ் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு அ.சா.10 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையின் நலை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

5(iv). அ.சா.11 காவல் ஆய்வாளர் திருமதி.புவனேஷ்வரி அவர்கள், அ.சா.10 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த மேற்படி வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு **அ.சா.ஆ.2** பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ.4** மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தில் காயமுற்ற மணிக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.5** விபத்து பதிவேடு பெற்றுள்ளார். விபத்தில் இறந்த மணியின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.6** பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். 20.06.2025 ம் தேதி எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5(v). புலன்விசாரணை அதிகாரி அ.சா.11 அவர்கள் விபத்து ஏற்படுத்திய TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட TATA கனரக லாரியை கைப்பற்றி, மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். பின்பு மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.7** மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். மேலும், இறந்தவர் சடலத்தை உரிய சாட்சிகள் முன்னிலையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மூலமாக உறவினரிடம் ஒப்படைத்துள்ளார். புலன்விசாரணையில் எதிரியின் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் சான்றாவணங்களிலிருந்தும் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் சட்டப்பிரிவு 351 BNSS-ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>** :-

i) எதிரி மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக பொது பாதையில் அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ லாரியை ஓட்டி மணி என்பவருக்கு இறப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளாரா?

ii) எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன்படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

8. அரசு தரப்பு வழக்கின்படி கடந்த 20.06.2025 ம் தேதி அதிகாலை 02.20 மணிக்கு வெள்ளக்கல் - ஜருகு சாலையில் உள்ள FMSSY 2.200 கி.மீ என்ற மைக்கல் அருகில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகில் உள்ள வளைவில் எதிரி ஆறுமுகம்

என்பவர் TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட TATA லாரியை ஓட்டிக்கொண்டும் மணி என்பவர் இடது டோர் ஓரமாக உட்கார்ந்து கிளினர் வேலை பார்த்துக்கொண்டு வந்தபோது எதிரி மேற்படி லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து லாரியை திடீரென ரோட்டின் வலது புறம் வளைத்ததில் மணி உட்கார்ந்து வந்த பக்கம் இருந்த லாரியின் இடது பக்க டோர் திறந்ததால் மணி என்பவர் லாரியிலிருந்து வெளியே மல்லாக்காக விழுந்து விபத்து ஏற்பட்டு இறந்துள்ளார். எனவே, எதிரி ஆறுமுகம் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS -ன்படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிடப்பட்டது.

10. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார் கொடுத்த புகார்தாரருக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றும், சம்பவத்தை கேள்விபட்டு பின்பு புகார் கொடுத்துள்ளார் என்றும், அ.சா.1 எப்பொழுது புகார் கொடுத்தார் என்ற தேதியும், கையெழுத்திட்ட தேதியும் குறிப்பிடப்படவில்லை என்றும், புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடத்தை அடையாளம் காட்டிய நபர்களை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், அடையாளம் காட்டிய நபர்களிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெறவில்லை என்றும், பார்வை மகஜரில் கையொப்பம் செய்த ஒரே பெயரை கொண்ட இரண்டு நரசிம்மன் என்னும் பெயருள்ளவர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், விபத்தானது எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் நடைபெறவில்லை

என்றும், எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

11. அரசு தரப்பில் காவல் ஆய்வாளர் திருமதி.புவனேஷ்வரி அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா11 காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த விபத்தில் இறப்புற்ற மணியின் பிரேத பரிசோதனை சான்று மற்றும் விபத்திற்குட்பட்ட வாகனமான TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட TATA கனரக லாரியின் ஆய்வறிக்கை பொருத்து ஆட்சேபனை இல்லை என எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 294-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றபல்வகை மனு எண்.634/2026 அனுமதிக்கப்பட்டு மணி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சீனிவாசன் மற்றும் மணி உடலின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சதிஷ்குமார் மற்றும் விபத்து வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தரணீதர் ஆகியோர்கள் அரசு தரப்பில் விசாரிப்பதிலிருந்து நீக்குறவு செய்யப்பட்டு புலன்விசாரணை அதிகாரியான அ.சா.11 திருமதி.புவனேஷ்வரி மூலம் அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு, அ.சா.ஆ.6 பிரேத பரிசோதனை சான்று மற்றும் அ.சா.ஆ.7 வாகன ஆய்வறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. மேலும், புலன்விசாரணை அதிகாரி மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டை பரிசீலனை செய்கையில், காயம்பட்ட மணிக்கு காதில் இரத்தம் வந்தும், இடது கணுக்காலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.6 பிரேத பரிசோதனை சான்றினை பரிசீலனை செய்கையில், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சதிஷ்குமார் (The deceased would appear to have died of effects of Head Injureis. Sustained as a result of Blunt Force Treuma) இறப்புற்றவர் மழுங்கிய பொருளால் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாகவும், தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்திருக்கக்கூடுமென என சான்று வழங்கியுள்ளது புலனாகிறது. மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம்

மணிக்கு தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. மேலும் அ.சா.ஆ.7 வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில், (This accident was not due to any mechanical defect of this vehicle) வாகனத்தில் எந்தவித இயந்திர கோளாரினால் விபத்து ஏற்படவில்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை வழங்கியள்ளது புலனாகிறது. மேலும், எதிரி தரப்பிலும் மேற்படி அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்களை முரண்படுத்துமாறு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

13. இச்சூழ்நிலையில், எதிரியுடைய அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதா என்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. இவ்வழக்கின் புகார்தாரரான சித்ரா அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 சித்ரா தனது நீதிமன்ற விசாரணையின்போது,

> "கடந்த 20.06.2025 தேதியன்று வெள்ளிக்கிழமை இரவு 02.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது செல்வம் என்பவர் போனில் தொடர்பு கொண்டு தொப்பூர் வெள்ளக்கல் ரோடு அருகே லாரியின் டிரைவர் ஆறுமுகம் என்பவர் 6 சக்கர லாரியை வேகமாக ஓட்டி வந்ததாகவும், அதே வாகனத்தில் எனது கணவர் கிளீனராக ஓட்டுநருக்கு அருகில் அமர்ந்து சென்றபோது லாரி ஓட்டுநர் வாகனத்தை வேகமாக வளைவில் இயக்கியபோது, கிளீனர் கதவு திறந்து எனது கணவர் மணி மல்லாந்து பின்புறமாக விழுந்ததால், அவரது பின்னந்தலையில் அடிப்பட்டு காதிலும், மூக்கிலும் பேச்சு மூச்சில்லாமல் இருப்பதாக சொன்னார். அதன் பேரில் தருமபுரி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பேச்சு மூச்சில்லாமல் கிடந்தார். அடுத்த நாள் காலை 09.55 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது தொடர்பாக தொப்பூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. லாரியின் பதிவெண் TN 75-Z-3409 ஆகும். ஆஜர்

எதிரிதான் லாரியின் ஓட்டுநர் ஆவார். விபத்தின்போது, சிவக்குமார், செல்வம் ஆகியோர் லாரியில் அமர்ந்திருந்தார்கள்".

என குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.1ன் முதன்மை சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளித்திருந்தாலும், எதிரி வாகனத்தை வேகமாக வளைவில் இயக்கியதால் இடது பக்க கதவு திறந்து அ.சா.1ன் கணவர் கீழுந்து விபத்து ஏற்பட்டது என்பதை கேள்விபட்டுதான் புகார்மனு கொடுத்துள்ளார் என்பது அறியமுடிகிறது. ஆனால், அவருக்கு எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்பதால், அ.சா.1ன் சாட்சியம் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க உகந்ததல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. விபத்து சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகளான துரைசாமி, கந்தசாமி, சின்னசாமி, சாலம்மாள் ஆகியோர்கள் அரசு தரப்பில் அ.சா.2, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.5 அனைவரும் இறப்புற்ற மணிக்கு உறவினர்கள் என்பதும், பிரேத விசாரணையின்போது உடனிருந்தவர்கள் என்பதும் தெரியவருகிறது. மேற்படி சாட்சிகள் அனைவரும் வழக்கு சம்பவத்தை கேள்விபட்டு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த மணியை பார்த்துள்ளார்கள் என்பதும், எதிரியை இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான சிவக்குமார் மற்றும் செல்வம் அரசு தரப்பில் அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.6

தனது முதன்மை சாட்சியத்தில், லாரியை ஆறுமுகம் ஓட்டினார் என்றும், அவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளாரா என்பதை எனக்கு சரியாக கண் தெரியாததால் என்னால் அடையாளம் காட்ட இயவில்லை என கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

17. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 செல்வம் தனது முதன்மை சாட்சியத்தில், "நான் லாரியில் தூங்கி கொண்டிருந்தேன். முழித்து பார்த்தபோது மணி லாரியில் இருந்து தொப்பூர் அருகே கீழே விழுந்து கிடந்தார்" என கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.6 மற்றும் அ.சா.7 இருவரும் விபத்தின்போது லாரியில் பயணம் செய்திருந்தாலும் அவர்கள் எதிரியின் அதிவேகத்தால் லாரியின் கதவு திறந்து மணி கீழே விழுந்து இறந்ததற்கு எதிரிதான் காரணம் என எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

18. விபத்து ஏற்படுத்திய TN 75 Z 3409 என்ற லாரியின் உரிமையாளரான சக்திவேல் அரசு தரப்பில் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.8 தனது முதன்மை சாட்சியத்தில், விபத்து சம்பவத்தின்போது எதிரி ஆறுமுகம்தான் லாரியின் ஓட்டுநராகவும், லாரியில் இரண்டு லோடுமேன்கள் இருந்ததாகவும், மணி லோடு வேலை செய்து வந்ததாகவும், விபத்து சமயத்தில் மணி என்பவர் லாரியில் இருந்து கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.8-ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில், எதிரிதான் விபத்து சமயத்தில் லாரியை ஓட்டினார் என கூறியிருந்தாலும், எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்பது பற்றி அ.சா.8 கூறவில்லை என்பது அவரது சாட்சியத்தின் மூலம் புலனாகிறது.

19. இச்சூழ்நிலையில் இந்நீதிமன்றமானது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் STATE OF KARNATAKA Vs. SATHIS in (1998) 8 SCC 493 என்ற முன் தீர்ப்பை சுட்டிக்காட்ட விரும்புகிறது.

> "4.....Merely because the truck was being driven at a "high speed" not bespeak of either "negligence" or "rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed". "High Speed"
>
> is a relative term. It was for the prosecution to bring on record material to establish as to what it meant by "high speed" in the facts and documences of the case. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions. There is no such statutory exception pleaded in the present case. In the absence of any material on the record, no presumption of "rashness" or "negligene" could be drawn by invoking the maxim "resipsa loquitur".........."

மேற்கண்ட முன்தீர்ப்பில் ஒரு சரக்கு வாகனம் 'அதிவேகத்தில்' ஓட்டப்பட்டது என்பதற்காகவே மட்டும், அது 'அலட்சியத்தையோ' அல்லது 'முரட்டுத்தனத்தையோ' குறிக்காது என குறிப்பிட்டுள்ளது. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7 இருவரும் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது பற்றி சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் மேற்கண்ட முன்தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருத்தமானதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. பார்வை மகஜர் சாட்சிகளான நரசிம்மன் அரசு தரப்பில் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.9 தனது சாட்சியத்தில், கடந்த 20.06.2025 ம் தேதி தொப்பூர் ஆஞ்சநேயர் கோவில் அருகே விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து

பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்ததாகவும், போலீசார் தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தான் பார்வை மகஜரில் முதலாவது சாட்சி கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான நரசிம்மன் அரசு தரப்பில் நீக்குறவு செய்யப்பட்டுள்ளார். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட தனிநபர் சாட்சிகள் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.9-ன் சாட்சியம் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க முக்கியத்துவம் பெறவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கவரன் அவர்கள் தனது சாட்சியத்தில், புகார்மனுவை பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன்விசாரணைக்காக வழக்குகோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்குவிசாரணையின்போது, புகார்தாரருக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றும், கேள்விபட்டு சம்பவ இடம் சென்று தெரிந்துகொண்டு புகார் தந்தார் என்றும், அ.சா.1 கொடுத்த புகாரில் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என கூறியுள்ளார். புகார்மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விபரம் புலன்விசாரணை கூறவில்லை என்பது தெரியவருகிறது.

22. காவல் ஆய்வாளர் திருமதி.புவனேஷ்வரி அவர்கள் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், இறப்புற்ற மணிக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு சான்று மற்றும் பிரேத பரிசோதனை சான்று பெற்றது குறித்தும், விபத்து வாகனத்தை ஆய்விற்கு உட்படுத்தி ஆய்வறிக்கை பெற்றது குறித்தும், இறப்புற்றவரின் உடலை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மூலம் உறவினரிடம்

ஒப்படைக்கப்பட்டது குறித்தும், இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

23. மேற்படி அ.சா.10 மற்றும் அ.சா.11 ஆகியோரின் முதன்மை சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் புலன் விசாரணையின்போது தங்களது அரசு பணியை சட்டப்படியாக செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில், தனி நபர் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு வலு சேர்க்காத நிலையில் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு அலுவலர்கள் மற்றும் புலன்விசாரணை அலுவலரின் சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. மேற்கண்ட சாட்சிகளின் மூலம் வழக்கு சம்பவத்தில் மணி என்பவர் இறந்துள்ளார் என்பது தெரியவருகிறது. ஆனால், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பார்க்கும்போது கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் அ.சா.6 மற்றும் அ.சா.7 இருவரும் விபத்து சமயத்தில் லாரியில் பயணம் செய்திருந்தாலும் இருவரும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அ.சா.1 முதல் அ.சா.5 மற்றும் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விபத்தை கேள்வியுற்ற சாட்சிகள் என்பதாலும், மேற்படி சாட்சிகள் யாரும் எதிரியை இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், அலுவலக மற்றும் புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தீர்மானிக்க இயலாது என்பதாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அரசு தரப்பில் எதிரி மீது 281, 106(1) BNS-ன் கீழாக சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

25. **முடிவாக**, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS-ன் கீழான குற்றங்களை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை சட்டப்பிரிவு 278(1) BNSS -ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சான்றுபொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து/தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஜுன் மாதம் 4 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.06.04 11:23:41 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**தருமபுரி.**

<u>**அரசு தரப்பு சாட்சிகள்**</u> :-

அ.சா.1 - திருமதி.சித்ரா

அ.சா.2 - திரு.துரைசாமி

அ.சா.3 - திரு.கந்தசாமி

அ.சா.4 - திரு.சின்னசாமி

அ.சா.5 - திருமதி.சாலம்மாள்

அ.சா.6 - திரு.சிவக்குமார்

அ.சா.7 - திரு.செல்வம்

அ.சா.8 - திரு.சக்திவேல்

அ.சா.9 - திரு.நரசிம்மன்

அ.சா.10 - திரு.கவரன் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)

அ.சா.11 - திருமதி.புவனேஷ்வரி (கவால் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | - | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | - | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | - | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | - | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.6 | - | TN 75 Z 3409 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | - | மணி என்பவரின் பிரேத பரிசோதனை சான்று |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :- இல்லை**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.06.04 11:23:49 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**தருமபுரி.**

========================

வரைவு/சீரான தீர்ப்புரை

ஆண்டு பட்டிகை எண்.506/2025

நாள் - 04.06.2026